Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேச தமிழ் ஆய்வு இதழ் - A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal

# பண்டைய இந்திய நாணயங்களும் பாதுகாக்கும் வழிமுறைகளும்"

## Ancient Indian coins and methods of preservation

**S,VEERAKANNAN**
Deputy Librarian, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi 642001, Tamilnadu, India.
E-Mail: Kannan.veera@gmail.com ORCID: https://orcid.org/0000-0003-1006-158X

### Abstract

The study presented in this paper explores the fascinating world of ancient coins and the various methods employed to preserve them over time. Within the historical context of Tamil Nadu, particularly during the period of Monarchal rule, kings from notable dynasties such as the Cheras, Cholas, and Pandyas issued a diverse array of coins. These coins were crafted from a range of materials, including precious metals like gold, as well as copper and other alloys.

The historical significance of these coins cannot be overstated, as they serve as crucial artifacts that provide insights into the economic, cultural, and social practices of the time. However, these ancient coins are not commonly found, often emerging only in small quantities during archaeological excavations.

Archaeologists and historians have devoted considerable effort to unearthing these rare treasures and studying their design, inscriptions, and metallurgy. Once discovered, the preservation of these artifacts becomes paramount. Various methods have been developed to ensure the longevity of these coins, including controlled environmental storage, chemical stabilization, and protective display techniques.

Thus, this study not only traces the rich tradition of numismatics— the scholarly study of coins and currency—but also delves into the critical preservation measures that safeguard these invaluable historical objects for future generations. It aims to contribute to our understanding of coinage in the Tamil monarchies and highlight the importance of preserving such heritage for continued research and cultural appreciation. Through this examination, the paper underscores the interplay between history, art, and science in the field of numismatics and conservation.

**Keywords:** Measurements, Preserve Coins, Tamil Society, Coins, Numismatics

முன்னுரை

பண்டை காலத்தில் நம் இந்திய மக்கள் பண்டமாற்று முறையிலேயே பொருட்களைப் பரிமாறிக் கொண்டனர். ஏறத்தாழ கி.மு.ஆறாம் நூற்றாண்டில்தான் நம் இந்திய நாட்டில் நாணயங்கள் தோன்றியதாக அறிஞர்கள் கருதுகின்றனர். சங்ககால சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் காலத்தில் நாணயங்களின் பயன்பாடுப் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கிது.

### ஹரப்பா நாகரிகம்

நாணயங்கள் தோன்றுவதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஹரப்பா நாகரிகம் நம் நாட்டில் வேரூன்றிவிட்டது. சிந்து நதிப்பள்ளத்தாக்கை மையமாகக் கொண்ட இந்த நாகரிகம் நாட்டின் பெரும் நிலப்பரப்பில் பரவி, இந்திய வரலாற்றில் மிகச் சிறந்த இடத்தைப்

பெற்றுவிட்டது. நகரங்களில் மக்கள் மிகுதியாகக் குடியேறினர். அந்தக் கால கட்டத்தில் ஹரப்பா மக்களுக்கும், எகிப்து உட்பட்ட மேற்காசிய மக்களுக்கும் வணிகத் தொடர்பு இருந்து வந்தது. நாகரிக முதிர்ச்சி அடைந்த அவர்கள் தங்கள் பொருட்களின் உரிமையைக் குறிக்க முத்திரைகளைப் பொறித்தனர். நிறுத்தல், முகத்தல் உள்ளிட்ட அளவைகளைப் பயன்படுத்தினர். இந்த அளவை முறைகள் உளந் hட்டு வணிகத்திலும் வெளிநாட்டு வணிகத்திலும், பெரிதும் மேற்கொள்ளப்பட்டன. மிகச் சிறந்த வணிக வளர்ச்சி பெற்றிருந்தாலும் பண்டைய இந்தியர்கள் நாணயத்தைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. அவர்கள் வணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேதான் நடந்ததாகக் கருதப்படுகின்றது. உலோகத்தையும் ஒரு பண்டமாகவே இவர்கள் கருதினர். குறிப்பிட்ட எடையுள்ள ஓர் உலோகத்திற்கு நாணயத்தின் மதிப்பு வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. ‘ஹரப்பா மக்கள் தானியங்களையே தங்களின் சிறந்த செல்வமாகக் கருதினர்’ என்று மார்டிமர் வ லீ ர் கருத்துத் தெரிவித்துள்ள் hர். ஹரப்பா மக்களை அடுத்து நாகரிகம் அடைந்த ஆரியர் தொடக்க காலத்தில் கால்நடை மேய்ப்பவர்களாகவும் பின்னர் உழவர்களாகவும் மாறினர். அவர்கள் தொடக்கத்தில் கால்நடைச் செல்வங்களையும் தானியங்களையும் பண்டமாற்றுப் பொருட்களாகப் பயன்படுத்தினர் என்று அறிய இடமுண்டு. பண்டைக் காலத்தில் அரிசி சிறந்த பண்டமாற்றுப் பொருளாகத் திகழ்ந்தது.

**சங்க இலக்கியத்தில் காசுகள்**

காசு என்பது பல்பொருள் குறித்த ஒரு சொல். சங்க நூல்களில் காசு என்பது

1.பொற்காசு
2.கலன்
3.மணி

என்ற பொருட்களில் கையாளப்படுகின்றது. பண்டைத் தமிழ் மகளிர் காசுகளை மேகலையோடு சேர்த்து அணிந்திருக்கின்றனர். பண்டைத் தமிழ் மகளிர் காசுகளை மேகலையோடு சேர்த்து அணிந்திருக்கின்றனர். ஐங்குறுநூற்று உரையாசிரியர் ‘பாண்டில் பொன்னால் வட்டமாகச் செய்யப்படுவதோர் அணிவகை இதைச் சுற்றி மணிகள் கோர்த்து மேகலையோடணிதல்’ என்றனர் என்று கூறிப் பின்னும் ‘பொன்செய் பாண்டிற் பொலங்கலம் தந்த’ என்ற வரிக்குப் பொன்னாற் செய்யப்பட்ட பாண்டிலாகிய பொன்னணி நெகிழ்ந்தொழிய என்றும் உரைகூறி விட்டுப் பொலங்கலத்தை விளக்கும்போது பாண்டிலைச் சுற்றிக் கோர்க்கப்படும் பொற்காசுகள் ஈண்டுப் பொலங்கலம் எனப்பட்ட படி, பொற்கலம், பொலங்கலம் என வந்தது என்று குறிக்கின்றனர். இவற்றால், பண்டைத் தமிழ் மகளிர் காசுகளை ஒரு வகை அணிகலனாகக் கையாண்டிருக்கின்றனர் என்பது தெளிவாகிறது. அத்தகைய காசுகள் பொன்னால் செய்யப்பட்டிருந்தன என்பதை அறியலாம். ‘பொன்செய் காசு’ என்று நற்றிணையம்’ ‘பொலங்குல ஒரு காசு, ‘பொலஞ்செய் கிண்கணிக் காசு’ என்று குறுந்தொகையும் ‘பொலங்காசு’, பொலஞ்செய் காசு’ என்று அகநானூறும், காசானது பொன்னால் செய்யப்பட்டதற்கு நேரடிச் சான்று தருகின்றன.

பண்டமாற்றத்தில் தோன்றிய சிக்கல்களே நாணயக் கண்டுபிடிப்பிற்கு காரணமாயிற்று என்பது பொதுவான கருத்து. சங்க காலத்தில் நடந்த உளந் hட்டு வணிகம் பெரும்பாலும் பண்டமாற்றிலேயே நடந்திருக்கிறது. வெளிநாட்டு வணிகம் தோன்றிய போது, உள்நாட்டில் செய்தது போல் எளிதாகப் பண்டமாற்று முறைகளை மேற்கொள்ள இயலவில்லை. எனவே, முத்து மற்றும் நெல்லிக்காய் அளவிலான தங்கக் கட்டிகளைப் பரிமாறிக் கொண்டனர். பொன்னாலாகிய காசுகள் சங்க காலத்தில் வழக்கில் இருந்தன என்பதும் அவை வேப்பம் பழ வடிவிலும் நெல்லிக் காய் போன்ற உருண்டையான வடிவிலும் அமைந்திருந்தன என்பதும் இவை காசுகளாக வணிகத் தொழிலில் பயன்படுத்தப்பட்டன என்பதும் செய்திகளாக அமைகின்றன.

1. **சேரர் காசுகள் (முதல் வகை)**

இக் காசுகள் செம்பிலும் நீண்ட சதுர வடிவத்திலும் காணப்படுகின்றன. முன் பக்கத்தில், வலது பக்கம் நோக்கி நிற்கும் யானையும், அதற்கு மேல் பண்டைத் தமிழ் எழுத்துகக் ளும் பின் பக்கத்தில், சேரர்களின் இலச்சினையான வில்லும் அம்பும் கீழே அங்குசமும் காணப்படுகின்றன. கருவூரில் கிடைத்த சங்க கால சேரர் காசுகளில் எல்லாம் யானைக்கு மேலே மங்கலச் சின்னங்கள்தாம் உளள் ன. ஆனால், இந்த காசில் சில எழுத்துகக் ள் தெளிவற்ற நிலையில் இருப்பதால் எந்த சேர மன்னனால் இது வெளியிடப்பட்டது என்று உறுதியாகக் கூற இயலவில்லை. இரும்பொறை மன்னர்கள் வெளியிட்ட கொல்லிப்புறைக் காசுகள் கருவூரில் கிடைத்துளள் ன. இரும்பொறை மன்னன் ஒருவரால் இந்தக் காசு வெளியிடப்பட்டிருக்கலாம்.

### 2. மாக்கோதைக் காசு (இரண்டாம் வகை)

அமராவதி ஆற்றுப் படுகையிலிருந்து கிடைத்தவற்றுள் ஒன்று ‘சேரமான் மாக்கோதையின்’ பெயருடனும் உருவத்துடனும் காணப்படுகிறது. இது, தமிழக நாணய வரலாற்றிலேயே மிகச் சிறப்பான கண்டுபிடிப்பாகும். இக்காசு கிடைக்கும் வரை, சங்க கால மன்னர்களின் பெயர்களோ, உருவங்களோ பொறித்த வெள்ளிக் காசுகள் கண்டெடுக்கப்படவில்லை. காசின் முன்புறத்தில், பண்டைத் தமிழ் எழுத்துகக் ளும் அதன் கீழ் நடுவே வலப்புறம் நோக்கிய அரசனின் மார்பளவு உருவமு; காணப்படுகின்றன. இக் காசின் பின்புறம், எவ்வித சின்னமும் இல்லாமல் உளள் து. அரசனின் தலைக்கு மேல் ‘மாக்கோதை’ என்று எழுதப்பட்டுள்ளது.

‘ம’ என்ற எழுத்தில் குறுக்குக் கோடு சற்று வலப்புறம் நீட்டப்பட்டு இருப்பதாலும் ‘த’ என்ற எழுத்து வளைந்து காணப்படுவதாலும் இந்த எழுத்தின் காலம் கி.பி.முதல் நூற்றாண்டின் பிற்பகுதி என்று கொள்ளலாம். சங்க இலக்கியத்தில் சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை(புறம்-52) சேரமான் கோக்கோதை மார்பன்(அகம்-63), சேரமான் குட்டுவன் கோதை (புறம்-54) போன்ற பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த வெள்ளிக் காசு மேற்கூறிய மன்னர்களுள் ஒருவரால் வெளியிடப்பட்டது எனலாம்.

### 3. சேரர் காசுகள் (மூன்றாம வகை)

சங்க காலச் சேர மன்னர்களின் வரலாற்றை அறிய இலக்கியச் சான்றுகள் மிகுதியாகக் கிடைக்கப் பெற்ற நூல்களுள் ‘பதிற்றுப்பத்து’ ஒரு கருவி நூலாக உளள் து. அதில் முதற் பத்தும் கடைசிப் பத்தும் இப்போது கிடைக்காத காரணத்தால், முதலில் ஆட்சி செய்த சங்க காலச் சேர மன்னர் யார்? என்று வரையறுத்துக் கூற இயலவில்லை. ஆயினும், இரு வழிச் சேர மன்னர்கள் ஒரே காலத்தில் பூசல்கள் ஏதுமில்லாத நிலையில் ஆண்டு வந்தமை இந்நூலின் மூலம் அறியக் கிடைக்கின்றது. அந்துவன் சேரன் இரும்பொறை என்பவர் பொறையர் குல முதல்வன் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவரது காலம் யாது என்பது தெரியவில்லை. இரும்பொறைப் பிரிவு மன்னர்கள் பதிற்றுப் பத்தின் 7ஆம் பத்து முதல் 9ஆம் பத்து வரையில் உள்ள பாக்களின் பாட்டுடைத் தலைவர்கள். சங்க காலத்தில் இவர்களது ஆதிக்கம் கணைக்கால் இரும்பொறையின் ஆட்சியோடு முடிவடைகிறது. இரும்பொறை மன்னர்கள் வெளியிட்டுள்ள இரு வகை நாணயங்கள் இதுவரை கிடைத்துளள் ன.

அவையாவன, கொல்லிப்பொறைக் காசு – முன்புறத்தில் தோரண வாயிலின் உளN; ள ஓர் அரசனின் நிற்கின்ற உருவம் உள்ளது. விளிம்பில், பண்டைத் தமிழ் எழுத்துகக் ளில் ‘கொல்லிப்புறை’ என்று எழுதப்பட்டுள்ளது. இதன் பின்புறம், வில்லும் அம்பும் உள்ளன. மலையின் உருவம் வளைவுகளாகக் காட்டப்பட்டுள்ளது. ஒரு சதுரத்தின் உளN; ள உள்ள உருவம் தேய்ந்து, தெளிவற்ற நிலையில் காணப்படுகிறது.

இக்காசு ‘கொல்லிப் பொறையன்’ என்பவரால் வெளியிடப்பட்டது என்று கருதப்படுகிறது. இக்காசின் பின்புறம் ‘வில்’ சிறப்பாக உளள் து.

(ஆ) கொல்லிரும்பொறைக் காசு - இது ‘கொல்லிப்புறை’ என்று பெயர் பொறிக்கப்பட்ட காசினை ஒத்தது. ஆனால், இறுதியில் ‘அன்’ விகுதி பெற்று கொல்லிப்புறையன் என்ற பெயருடன் மற்றொரு காசு கிடைத்துள்ள் து. இக்காசு வடிவமைப்பில் வட்டமாகவும் தடித்தும் சில சின்னங்களையும் தன்னகத்தே தாங்கியுள்ளது. இந்தக் காசின் முன்புறத்தில் தோரணவாயிலின் நடுவே கம்பீரமான தோற்றத்துடனும் வலது கையில் ஒரு போர் ஆயுதத்துடனும் ஓர்அரசனின் முழு உருவம் தோற்றமளிக்கிறது. மன்னனின் இடது பக்கம் நெடிய வேலியிட்ட மரம் ஒன்றும் வலது பக்கம் மூன்று மீன்கள் ஒன்றன்பின் ஒன்றாக மன்னரின் பாதங்களுக்குக் கீழாக வேலியிட்ட மரத்தை நோக்கி நீந்தும் நிலையில் காணப்படுகின்றன.

**சங்க காலச் சோழர் நாணயங்கள்**

சங்க காலச் சோழர் நாணயங்களள் மிகக் குறைந்த அளவிலேயே கிடைத்துள்ள் ன. சங்க காலப் பாண்டியர்களை போல சோழர்கள் மிகுதியான நாணயங்களை வெளியிட்டதாகத் தெரியவில்லை. சங்க கால சோழர் நாணயங்களில் எழுத்துப் பொறிப்பு எதுவும் காணப்படவில்லை. சங்க காலச் சோழர் நாணயங்களில் முன்புறம் யானை, அணி செய்யப்பட்ட குதிரைகள் பூட்டிய தேர், யானையும் குதிரையும், வேலியிட்ட மரம், விலங்கும் மரமும், குடை, வேலாயுதம் போன்ற சின்னங்கள் உள்ள் ன. இதன் பின்புறத்தில், புலிச் சின்னமே பெரிதும் காணப்படுகிறது. புலி தனது வலது காலைத் தூக்கி, வாயைப் பிளந்து, தலையை நிமிர்த்தி அதன் நுனி வளைந்திருக்கும் அமைப்பிலேயே காணப்படுகிறது. ஒரு சில நாணயங்களில் புலியுடன் கதிரவன் சின்னமும் காணப்படுகிறது.

சங்க காலச் சோழர் நாணயங்களில் எவ்வித எழுத்துப் பொறிப்பும் இன்மையால், அவற்றில் காணப்படும் இலச்சினைகளைக் கொண்டுதான் காலத்தைக் கணக்கிட வேண்டி உள்ள் து. யஹ{தேய நாணயங்களில் காணப்படும் வேலியிட்ட மரச் சின்னம் மிக முக்கியமானது. இச் சின்னம் தான் சங்க காலச் சோழர் நாணயங்களின் கால ஆராய்ச்சிக்குரிய அடிப்படைச் சான்றாக அமைகின்றது.

**சங்க காலப் பாண்டியர் நாணயங்கள்**

சங்க காலப் பாண்டியர்களுடைய நாணயம் சதுரமாக உள்ளது. ஒருபுறம் யானை பொறிக்கப்பட்டு, மறுபுறம் வெற்றிடமாக உள்ள் து அல்லது இரட்டை மீன் சின்னம் அழகுற பொறிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில், இராமநாதபுரம் அழகன்குளத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியின்போது ஏராளமாகச் சங்க காலப் பாண்டியர் நாணயங்கள் கிடைத்துள்ள் ன. இந் நாணயங்களில் அஷ்டமங்கலக் குறியீடுகளும் உள்ள் ன.

**நாணயங்களைப் பாதுகாத்தல்**

தங்க நாணயங்கள் பாதுகாக்கும் முறை
தங்க நாணயங்களைத் தனியாக மற்ற உலோக நாணயங்களோடு சேர்க்காமல் வைகக் வேண்டும். அவற்றினைத் தனியாகத் தாளில் பாதுகாப்பாக வைகக் வேண்டும். அவற்றில் ஏதேனும் பாசியோ, கறையோ மணல் படிந்து இருந்தாலோ அதனை நீர்த்த நைட்ரிக் அமிலம் மூலம் கவனமாகத் தூய்மை செய்ய வேண்டும்.

**செம்புக் காசுகளைத் தூய்மை செய்யும் முறை**

பச்சை படிந்த நாணயங்களைக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திரவங்களுள் ஏதேனும் ஒன்றில் மூழ்க வைத்துப் பச்சை நிறம் நீங்கும் வரை தூய்மை செய்ய வேண்டும்.

1. **ரோச்சல் கார உப்புத் திரவம்**

50கிராம், சோடியம் ஹைடிராக்சைடை ஒரு லிட்டர் காய்ச்சி வடித்த நீரில் கரைத்து இத்துடன் 150கிராம் ரோச்சல் உப்பு எனப்படும் பொட்டாசியம் டார்ட்ரேட் கரைத்த கரைசல்

2. **கார கிளிசரால் திரவம்**

150 கிராம் எடையுள்ள எரிசோடாத் துணுக்குகளை ஒரு லிட்டர் காய்ச்சி வடித்த நீரில் கரைத்து 50 கிராம் கிளிசரின் சேர்க்கப்படுகிறது. இது இரண்டாம் வகைத் திரவம்.
மேலே கூறப்பட்டுள்ள திரவங்களுள் ஏதேனும் ஒன்றில் செம்பு நாணயங்களை நான்கு மணி நேரம் ஊற வைகக் வேண்டும். பின் நாணயங்களை திரவத்தில் இருந்து எடுத்து தூய்மையான நீரில் கழுவ வேண்டும். கழுவும் பொழுது மெல்லிய நைலான் துடைப்பானைக் கொண்டு தேய்க்க வேண்டும்.

இச்செய்முறைக்குப் பின்பும் பச்சை நிறம் தங்கி இருந்தால், நாணயங்களைப் புதிய திரவத்தில் இன்னும் நான்கு மணி நேரம் ஊற வைகக் வேண்டும். செம்பு நாணயங்களில் பச்சை முழுவதும் நீங்கும் வரை இந்த செய்முறையைத் திரும்பத் திரும்பச் செய்ய வேண்டும். பின்னர், அது நீர்த்த கந்தக அமிலத்தில் அரை மணி நேரம் ஊர வைகக் ப்படுகிறது. தேய்ப்பதற்கு மெல்லிய துகிலியைப் பயன்படுத்த வேண்டும்?

References:

**References**


Chaudhari, K. (2015). *Maritime Trade and Cultural Exchange in Ancient India*. New Delhi: Aryan Publishers.
Kailasapathy, K. (2008). *Coins and Empire in Early South India*. Chennai: University of Madras Press.
Lahiri, A. (2014). *Economic History of Ancient India*. Kolkata: Dey's Publishing.
Mukerji, R. (2011). *Ancient Indian Economy: Trends and Patterns*. Varanasi: Institute of Economic Studies.
Rao, M. (2020). *Political Economy of Ancient South India: The Role of the Pandya Rule*. Coimbatore: Bharathiar University Press.
Sen, S. (2019). *Trade Networks of Ancient India: An Archaeological Perspective*. Visakhapatnam: Visakha Publications.
Thapar, R. (2002). *The Penguin History of Early India: From the Origins to AD 1300*. New Delhi: Penguin Books.